யின் வளர்ச்சியையும் மேம்படுத்த முடியும். எனவே சுற்றுலாத் துறையின் மூலமாக அந்தப் பணியை முடித்துத்தர ஆவன செய்கிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வால்பாறைப் பகுதிக்கு அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் கணக்கை அடிப்படையாக வைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு சுற்றுலாத்துறையை நவீனப்படுத்தி வருகிற இந்த காலகட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத்துறையினுடைய உதவியோடு பல்வேறு அரசுத் துறைகளோ அரசின் சார்பு நிறுவனங்களோ இப்படிப்பட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இயற்கை எழிலையும் அந்த மலைப் பிரதேசத்தினுடைய வனப்பையும் பாதிக்காத வகையில் செய்ய வேண்டும். அந்த வகையில் அரசுத் துறை அல்லது அரசு சார்ந்த துறையின் சார்பாக இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கு அரசு ஊக்கம் அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அவர்கள் கடிதம் மூலம் அளிப்பார்களேயானால் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 60 திரு. எஸ். ஆசைமணி மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

60—

கும்பகோணம் தாலுகா கோவிந்தபுரம் கதர் பட்டு உற்பத்தி பிரிவுக்குக் கட்டிடம் கட்டுதல்.

*22548—திரு. எஸ். ஆசைமணி:

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா கோவிந்தபுரத்தில் உள்ள ''கதர் பட்டு உற்பத்தி பிரிவு'' கதர் வாரியத்தினால் கட்டி முடிக்கப்பட்டும், கும்பகோணத்தில் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா ?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE

1994 மார்ச் 19]

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா ?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி (கதர்த்துறை அமைச்சர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளதை அரசு நன்கு அறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள தஞ்சை மாவட்டம், கோவிந்தபுரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தற்பொழுது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கதர் பட்டு உற்பத்திப் பிரிவில் உபகிளை இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1993–94 ஆம் ஆண்டிற்கான குழுவின் நூற்று நாற்பத்தெட்டு முதல் நூற்று ஐம்பத்திரெண்டு வரையிலான (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஐந்து அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், நீங்கள் எதுவும் என்னிடத்